# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண். 210/2015

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | அருள்குமார் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | நடராஜன் | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 51 | ஜாதி | .. | கொங்குவேளாளர் |
| கிராமம் | .. | கரியானூர் | நாள் | .. | 15.03.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. அருள்குமார் என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

வா.சா.1 – அருள்குமார் - 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி.

வருவாய் ஆவணங்களில் பெயர் தவறாக பதியப்பட்ட விபரம் உங்களுக்கு எப்போது தெரிய வந்தது என்றால், 2015 ஆம் ஆண்டு வழி மறித்து பிரச்சனை செய்தார்கள், அப்பொழுதுதான் தெரியவந்தது. பெயர் மாற்றம் குறித்து மனு ஏதேனும் உரிய அரசு அலுவலரிடம் அளித்துள்ளீர்களா என்றால், இல்லை. கோயில் நிர்வாகம் சார்பில் பிரதிவாதிகள் மீது அத்துமீறியதற்காக நடவடிக்கை ஏதும் எடுத்தீர்களா என்றால், இல்லை. சர்வே எண்.384/6 யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால், அது கோயில் நிலமாகும். கோயிலை சுற்றி கட்டப்பட்டுள்ள சுற்றுசுவர் யாரால் கட்டப்பட்டது என்றால், ஊர் பொதுமக்களால் கட்டப்பட்டது. எத்தனை குடும்பங்கள் சேர்ந்து கோவில் திருவிழாவை நடத்துவீர்கள் என்றால், 21 குடும்பங்கள் சேர்ந்து கோவில் திருவிழாவை நடத்துவோம். இந்த வழக்கில் மற்ற குடும்பங்களை ஏன் வழக்குதாரர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால், மற்ற குடும்பங்களை அழைத்து பேசி தர்மகர்த்தா என்ற முறையில் நான் வழக்கை தாக்கல் செய்தேன். நான் கோவிலில் தர்மகர்த்தாவே இல்லை என்று சொன்னால், சரியல்ல. எனது தந்தையார் கோவில் தர்மகர்த்தா என்றாலும், அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போகவே அதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு நான் தர்மகர்த்தா பொறுப்பை எடுத்துக்கொண்டு, சர்வாதிகாரமாக செயல்பட்டு வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் 21

குடும்பங்களால் நியமிக்கப்படவில்லை என்றாலும், நான்தான் அத்துமீறி கோவில் நிர்வாகத்தில் தலையிட்டு வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. கோவில் எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால், அது 1970 ஆம் ஆண்டு எனது தந்தையால் புதுப்பிக்கப்பட்டது. 03.09.2010 மற்றும் 19.11.2010 ஆகிய தேதிகளில் பெற்ற கிரையப்பத்திரம் எனது தகப்பனாரை தர்மகர்த்தாவாக இருக்கும்பொழுது கோவிலுக்காக நிலம் வாங்கியது சம்பந்தப்பட்டது என்று சொன்னால், சரிதான். மேற்கண்ட 21 குடும்பங்களும் கோவில் நிலங்களை வாங்க அதிகாரம் ஏதேனும் உங்களுக்குக் கொடுத்தார்களா என்றால், மேற்கண்ட இரு கிரையங்களுக்கு பின்னிட்டு எந்த இடமும் வாங்கவில்லை, அதனால் எந்த அதிகாரமும் கொடுக்கவில்லை. சர்வே எண்.384/5, 384/6 அரசு புறம்போக்கு நிலம் என்றால், சரிதான், அந்த இடத்தை கோவிலுக்காக பயன்படுத்தி வருகிறோம். சர்வேஎண்.384/6 என்ற இடம் வருவாய் துறையின் ஆவணங்களின்படி 1 ஆம் பிரதிவாதியின் தாயார் குட்டியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்று சொன்னால், தவறுதலாக வந்துவிட்டது. அர்த்தனாரிகவுண்டர், அருணாசலம், குட்டியம்மாள், அருணகிரி கவுண்டர், பொன்னுசாமி ஆகியோர்கள் உங்களுக்கு என்ன உறவுமுறை என்றால், பங்காளி உறவுமுறை ஆவார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் திருவிழாவை நடத்திவருகிறோம் என்றால், சரிதான். அருணாசலம் மற்றும் குட்டியம்மாள் என்பவரின் வாரிசுதான் 1 ஆம் பிரதிவாதி என்று சொன்னால், சரிதான். 1 ஆம் பிரதிவாதி, அருணாசலம் மற்றும் குட்டியம்மாள் ஆகியோர்களின் வாரிசு என்ற முறையிலும், கோவில் நிர்வாகத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால், சரியல்ல. அருணாசலம் என்பவர் உங்கள் தகப்பனாருக்கு என்ன உறவுமுறை என்றால், அப்பா வழி பங்காளி முறை ஆவார். பிரதிவாதிகளின் நிலம் கோவில் நிலத்தின் அருகில் உள்ளதால், கோவிலுக்கு தடம் கேட்டு தனிப்பட்டமுறையில் பிரச்சனை செய்து வருகிறோம் என்று சொன்னால், சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வா.சா.1 இன் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / அருள்குமார்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.